வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   29.10.2025 புதன்கிழமை   இதழ் : 302   பக்கங்கள் : 08




# இலங்கை இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம்!

## சுவிற்சர்லாந்தின் சமூக ஜனநாயக கட்சி தனது மாநாட்டில் ஏகமனதாக தீர்மானம்!

ஜெனிவா, ஒக்ரோபர் 29

**இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த சுவிற்சர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்துடன், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் - இவ்வாறு அந்த நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியான சமூக ஜனநாயக கட்சி தனது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

சர்வதேச மட்டத்தில் இயங்கிவரும் அரசசார்பற்ற அமைப்பான 'இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள்' எனும் அமைப்பினால் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு தொடர்பில் கடந்த வருடம் வெளியிடப்பட்ட சட்ட அறிக்கையில் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டிருக்கும் மேற்படி தீர்மானத்தில் "ஈழத்தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட வன்முறைகள், படுகொலைகள், மிக மோசமான மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை அந்தத் தீர்மானத்தில் இலங்கையில் இடம்பெற்ற மீறல்களை ஐக்கிய நாடுகள் இனவழிப்புப் பிரகடனத்தின்படி இனவழிப்பாகக் கருதமுடியுமா என்பது பற்றி சர்வதேச கட்டமைப்புகளின் ஒத்துழைப்புடன் ஆராயுமாறு சுவிற்சர்லாந்து அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு, சுவிற்சர்லாந்தில் வாழும் புலம் பெயர் தமிழர்களின் 07

## செவ்வந்தி குறித்த விசாரணை; இரு விசேட குழுக்கள் வடக்கில்!

கொழும்பு, ஒக். 29

இஷாரா செவ்வந்திக்கு உதவி புரிந்தமை தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் இரு விசேட குழுக்கள் வடக்கில் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இஷாரா செவ்வந்தி நாட்டில் தலைமறைவாக இருக்கவும் தப்பிச் செல்ல உதவியமை தொடர்பிலும் விசாரிக்க ஏற்கனவே 4 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

இதேநேரம், இஷாராவை இந்தியாவுக்கு அனுப்பினார் என்று கூறப்படும் ஆனந்தன் என்பவரின் வீட்டிலிருந்து துப்பாக்கிகளும் ரவைகளும் 07

## 2 இலட்சம் மாணவர்களிடம் போதைப்பொருள் பாவனை

### கொழும்பில் மாத்திரம் இந்நிலை

கொழும்பு, ஒக். 29

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளை பயன்படுத்துகின்றனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் 07

## தமிழ் அமைச்சர்களாலேயே மீனவர் சமூகத்துக்குள் பிளவு

### வடமராட்சி வடக்கு கடற்றொழில் சமாசம்

**- சி. தில்லைநாதன் -**

வடமராட்சி, ஒக். 29

கடற்றொழில் அமைச்சராக தமிழர்கள் வந்தபின்னரே வடக்கு மீனவர் சமூகம் பிளவுண்டு போயுள்ளது. டக்ளஸ் தேவானந்தா, தற்போது சந்திரசேகர் தரப்புகள் தமது அரசியல் ஆதாயங்களுக்காக மீனவர் சமுதாயத்தை பயன்படுத்தி வருகின்றனர் - இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் த. சந்திரதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வடமராட்சி ஊடக 07

## யாழில் 'ஐஸ்'டன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருவர் திருநெல்வேலியில் உணவகம் ஒன்றில் திருட்டில் ஈடுபட்டவர் என்றும் கூறப்பட்டது. கைதான 07

## கிழக்கு அபிவிருத்திக்காக ரூ. 235 கோடி நன்கொடை!

### இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

பொத்துவில், ஒக்ரோபர் 29

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக 235 கோடி ரூபாய் நன் கொடை உதவி எம்மால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 33 சமூக, பொருளாதார, அபிவிருத்தித் திட்டங்கள் நடை முறைப் படுத்தப்படவுள்ளன என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.



பொத்துவிலில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் கோமாரி களுகொல்லை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 07

## எதிர்க்கட்சிகளின் இணைவால் அரசாங்கத்துக்கு பாதிப்பில்லை

### ஆளும் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 29

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதால் அரசாங்கத்துக்கு பாதிப்பு இல்லை - என்று ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், இலங்கை, நாடு என்ற ரீதியிலும் இங்குள்ள மக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நெருக்கடியான நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். 07



## செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 29

செம்மணி மனிதப் புதைகுழிகளுக்கு நீதி கோரி செம்மணியில் நேற்றைய தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை, நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக்குழு ஆகியவை இணைந்து செம்மணி அணையா விளக்கு முற்றத்தில் இந்தப் 07

## கிழக்கில் இந்தியாவின் திட்டங்களுக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 29

இந்தியாவின் அனுசரணையில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 33 அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பில், இந்திய - இலங்கை 07

## அரசுக்கு எதிரான பேரணி; ஐ. ம. ச. இணைய வேண்டும்

### பொதுஜன பெரமுன அழைப்பு

கொழும்பு, ஒக். 29

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் இணையு மாறு ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு சிறீ லங்கா பொது ஜன பெரமுன கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புர நேற்று கட்சியின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் 07

## மன்னாரில் புதிய காற்றாலை அமைக்காதிருக்க நடவடிக்கை

### அமைச்சரவை பத்திரம் தயாராகிறது

மன்னார், ஒக். 29

மன்னார் தீவில் தற்போது அமைக்கப்படுவதைத் தவிர புதிய காற்றாலை திட்டங்களை அமைக்காது இருப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தைத் தயாரிக்கும் பணி கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணி வெற்றிடத்தை நிரப்பக்கோரி யாழ். பல்கலையில் நேற்று போராட்டம்!




யாழ்ப்பாணம், ஒக். 29

ஆளணி வெற்றிடங்களை நிரப்பக் கோரி யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தில் கல்விசாரா ஊழியர்க ளின் பிரச்னைகளுக்கும் மாண வர் நலன்சார்ந்த பிரச்னைகளுக் கும் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்வு காணவேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசாரா பணியாளர் வெற்றி டங்கள் 355 நிலவும் நிலையில் 117 வெற்றிடங்களே நிர்வாகத் தால் கோரப்பட்டுள்ளது. அத் துடன், பல்கலைக்கழக சுற்று நிருபத்துக்கு முரணாக தனியார் நிறுவனங்களூடா கவும் ஊழி யர்கள உள்வாங்கப்பட்டு சேவை ஒப்பந்தத்தின் ஊடாக நியமனம் செய்யப்ப டுவது தவறு எனவும் சுட்டிக் காட்டி போராட்டம் நடை பெற்றது.

ஏற்கனவே இந்த முறைகேடு தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக் கும் பல்கலைக்கழக பேரவைக் கும் எழுத்துமூலம் அறிவிக்கப் பட்டும் அவை புறக்கணிக்கப் பட்டமையால் தாம் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று போராட்டக்காரர்கள் தெரி வித்தனர்.

உடனடியாக வெற்றிடங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப் படவேண்டும். இதற்கு காரண மாக இருந்த அதிகாரிகள் தண் டிக்கப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் வலியு றுத்தினர். இந்தப் போராட் டத்துக்கு ஆதரவு தெரிவித்து, தமிழ்த் தசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் எம். பி., செ. கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போராட்டக்காரர்களுடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் கலந் துரையாடினார்.

(ஐ-03)



# மாவை. சேனாதிராசா நினைவாக மரநடுகை

யாழ்ப்பாணம், ஒக். 29

மறைந்த முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன் னாள் தலைவருமான மாவை சோ. சேனாதிராசாவின் 83ஆவது பிறந்த தினத்தை முன் னிட்டு மர நடுகை நடை பெற்றது.

தமிழ் அரசு கட்சியின் காங் கேசன்துறை தொகுதி கிளை யின் ஏற்பாட்டில் இந்த மர நடுகை வலி. வடக்கு பிரதேசத் தில் தச்சன்காட்டு சந்திக்கு அண்மையாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் முன்னெ டுக்கப்பட்ட இந்த மர நடுகையின்போது வீதியில் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன், கட்சி தொண்டர்கள், ஆதரவாளர் கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-03)

# காணாமல் போன இளைஞர் காட்டுக்குள் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஒக். 29

கிளிநொச்சியில் காணாமல் போன இளைஞன் காட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யூனியன் குளத்தை சேர்ந்த அப்சரன் (வயது 26) எனும் இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த இளைஞன் கடந்த 24ஆம் திகதி வெளிநாட்டுக்கு பயணமாக இருந்த நிலையில் ஐந்து தினங்களுக்கு முன்னர் - கடந்த 19ஆம் திகதி முதல் காணாமல் போனார்.

காணாமல்போன மகனை பெற்றோர் தேடி வந்த நிலை யில் கடந்த 21ஆம் திகதி அக்கராயன் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் உறவினர்களும் இளைஞனை தேடி வந்தனர். இந்த நிலையில் இளைஞனின் வீட்டில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூ ரத்திலுள்ள காட்டினுள் மர மொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார்.

இளைஞரின் சடலம் உடல் கூராய்வுக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. அக்கராயன் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ஐ)

# குறும்பட போட்டி தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 29

தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 'ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்' நடை பெறும் குறும்படப் போட்டி தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாண வர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செய லக கேட்போர் கூடத்தில் மாவட்ட பிரதி தேர்தல் ஆணை யாளர் இ. சசீலன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாண பல் கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின ரின் பங்கேற்புடன் விழிப்பு ணர்வு நிகழ்வு நடைபெற்றது.

குறும்படத்துக்கு கதை எழு துவது எப்படி, புகைப்பட கருவி நுட்பங்கள் மற்றும் காணொலி செம்மையாக்கம், கைபேசியை பயன்படுத்தி குறும் படத்தை எப்படி உருவாக்கு வது, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி குறும்படங்களை எவ்வாறு தயாரிப்பது உள் ளிட்ட பல விடயங்கள் தொடர் பில் மாணவர்களுக்கு பயிற்சிய ளிக்கப்பட்டது.

இதன்போது, யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஊடக கற்கை கள், நாடகம் அரங்கியல் கற்கை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதையும், ஆக்கப் பூர்வமான வெளிப்பாடு மூலம் தேர்தல் செயல்பாட்டில் இளை ஞர்களின் பங்கேற்பை ஊக்கு விப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இலங்கைத் தேர்தல் ஆணையம் 'ஒரு வாக்கின் சக்தி யின் பௌரா கதைகள்' எனும் குறும்படப் போட்டியை இந்த ஆண்டு ஏற்பாடு செய்துள்ளது.


திறந்த பிரிவு மற்றும் பாடசாலை மாணவர்களுக் கான பிரிவு என இந்தக் குறும் பட போட்டியானது இரண்டு பிரிவுகளாக நடைபெற உள் ளது. இதற்கான தயாரிப்புகளை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி எதிர்வரும் நவம்பர் 14 ஆகும். தேர்தல் ஆணைக்குழு வின் இணையத்தளம் ஊடாக மேலதிக விவரங்களை அறிய முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ)

# வடக்குக்கான ரயில் சேவை 4 மணி நேரம் தடைப்படும்!

யாழ்ப்பாணம், ஒக். 29

வடக்கு மாகாண ரயில் போக்குவரத்து நாளை வியா ழக்கிழமை தொடக்கம் ஒரு வாரத்துக்கு பகுதியளவில் தடைப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.



வடக்கு மாகாண ரயில் தண்டவாளங்களை சீர்செய்யும் நடவடிக்கையும் வடக்கின் ரயில் மார்க்கத்தைத் தரமுயர்த் தும் செயல்பாடுகளும் இந்த ஒரு வார காலப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகள் முற்பகல் 10.15 மணி தொடக்கம் பிற்ப கல் 2 மணிவரை முன்னெடுக் கப்படும். இதனால், இந்த நேரத்தில் ரயில் போக்குவரத்து இடைநிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# செம்மணி படுகொலைகளுக்கு இந்த அரசாங்கம் நீதியை தராது

## மெதடிஸ்த திருச்சபையின் யாழ். குரு முதல்வர்

யாழ்ப்பாணம், ஒக். 29

செம்மணி படுகொலைக ளுக்கு இந்த அரசாங்கம் நீதியை தரும் என்று நம்பமுடியாது - இவ்வாறு மெதடிஸ்த திருச் சபையின் யாழ். மாவட்ட குரு முதல்வர் செல்வன் தெரிவித் துள்ளார்.

செம்மணி படுகொலைக ளுக்கு நீதி கோரி நேற்றைய தினம் அணையா தீபம் முற்றத் தில் போராட்டம் நடைபெற் றது.

இதன்போதே,

செம்மணி என்பது இனப் படுகொலை நடத்தப்பட்டதன் அடையாளம் மட்டுமல்ல, அது ஒரு சாட்சியும் ஆகும். இந்த சாட்சியமே இன்று இலங்கை யில் இனப்படுகொலை நடைபெற்றது - அதற்கான நீதி வேண்டும் என்பதையும் சர்வ தேசத்துக்கு எடுத்துச் சொல்கி றது.

எனவே, அதற்கான வலுப் படுத்தலை நாம் ஒவ்வொருவ ரும் முன்னெடுப்பது அவசியம். அதற்காகவே மெதடிஸ்த திருச் சபை இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. இதே நேரம் கொல்லப்பட்டவர்களின் குருதிகள் தமக்கான நீதியை பெற்றுத்தாருங்கள் என எங்கள் ஒவ்வொருவரிடமும் ஓலமிட்ட வண்ணம் இருக்கின்றன. அந்த ஓலங்களுக்கு நாம் நீதியை இலங்கையில் இந்த அரசாங்கத் திடமிருந்து எதிர்பார்க்க முடி யாது. எனவே, சர்வதேசத்திடம் இதற்கான நீதியை கோரி நிற்கி றோம் - என்றார்.

(ஐ-03)

## புத்தக கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 29

முத்தமிழ் கலைஞர் மேம் பாட்டு மன்றம், கலைஞனின் குரல் பத்திரிகை என்பன நடத்தும் புத்தகக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கொழும்பு புத்துறை சென். யோசப் வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது.

பாடசாலை அதிபர் யசி யானா மரிய சந்திரகுமார் தலை மையில் இந்தப் புத்தகக் கண் காட்சி நடைபெறும். (ஐ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 29

இளம் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வு -2026இற் குரிய விண்ணப்பங்கள் அகில இலங்கை சைவப்புலவர் சங் கத்தால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 23 ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்களை, 'சைவப் புலவர் சி. கா. கமலநாதன், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர், மாசேரி, வரணி, யாழ்ப்பாணம்', எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவர்கள் 077 719 7067, 077 977 3538, 077 613 2176, 077 135 0850 ஆகிய வட்ஸ் அப் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
29.10.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பிரச்னை தோல்வி அல்ல

நீதியை நிலைநாட்டும் விடயத்தில் தங்களுடைய நகர்வுகள் வெற்றியளிக்கவில்லை. அதில், நாங்கள் தோல்வியடைந்துதான் இருக்கிறோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். ஒரு கட்சியின் தலைவர் தோல்வியை ஒப்புக்கொள்வது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். அரசியலில் முன்னெடுக்கப்படும் நகர்வில் ஒரு குறித்த கட்சி தோல்வியை சந்திப்பதில் ஆச்சரியம் இல்லை. அனைத்து நகர்வுகளும் வெற்றியில்தான் முடிவுறும் என்றில்லை. ஆனால், தோல்விகள் ஏற்படும்போது, அந்தத் தோல்விகளிலிருந்து அரசியல் தலைமைகள் என்போரும் குறித்த சமூகமும் எந்தளவு கற்றுக்கொள்ள முயற்சிக்கின்றன என்பதுதான் முக்கியமானது.

யுத்தம் முடிந்து பதினாறு வருடங்கள் ஆகிவிட்டன. போருக்குப் பின்னரான தமிழர் அரசியலை முன்னெடுத்த அனைத்துக் கட்சிகளுமே தோல்வியடைந்திருக்கின்றன என்பதுதான் உண்மை. இந்தத் தோல்விகள் ஏன் ஏற்பட்டன? தமிழர் அரசியல் வரலாற்றில் போர் தோல்வி என்பது அதுவரையான அனைத்து அரசியல் நம்பிக்கைகள்மீதுமான முற்றுப்புள்ளியாகும். ஆனால், தமிழர் அரசியலை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்துமே போருக்கு பின்னரான தமிழர் அரசியல் தொடர்பில் யதார்த்தமான பார்வைகளைக் கொண்டிருக்கவில்லை.

ஒரு தரப்பு தொடர்ந்தும் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களை முன்வைத்த நிலையில், மறுபுறம் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ சர்வதேச அழுத்தம், புதிய அரசியல் யாப்பு என்னும் இன்னொரு வகை நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களிலேயே தங்களுடைய நேரத்தை செலவிட்டிருந்தது. இறுதியில் இரு தரப்புகளுமே தோல்வியடைந்திருக்கின்றன.

இப்போது, ஒப்பீட்டடிப்படையில் தமிழ் கட்சிகளில் பெரும்பாலானவை யதார்த்தங்களைப் புரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால், வாய்ப்பான சூழ்நிலையை கையாளாமல் விடும்போது, அதன் பின்னர் வாய்ப்புகள் கிடைத்தாலும் அது பலவீனமான வாய்ப்புகளாகவே இருக்கும். இன்றைய நிலையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதும் அதிலிருந்து பயணிப்பதும்கூட பெரும் சவாலாக மாறியிருக்கிறது. ஏனெனில் ஒருவேளை, மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்படவில்லை என்றால்கூட அதனை தடுத்துநிறுத்தும் வல்லமை தமிழ் கட்சிகளிடம் இல்லை. இதுதான் ஒரு குறிப்பிட்ட சூழலில் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவ விடும்போது எவ்வாறு அதன் பின்னரான நிலைமை இன்னும் சிக்கலடையும் என்பதற்கான சிறந்த உதாரணமாகும்.

உலக வரலாறு என்பதே போராட்டங்களின் வரலாறுதான். எனவே, ஒரு குறிப்பிட்ட சூழலை அடிப்படையாகக் கொண்டு போராட்டங்கள் வெளிவருவதானது உலகின் பல பாகங்களிலும் நடந்திருக்கின்றன. அவ்வாறான போராட்டங்களில் பெரும்பாலானவை தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. அவ்வாறு தோல்விகள் நிகழும்போதெல்லாம் அதற்கான காரணங்களை வெளியில் தேடிக் கொண்டிருப்பதற்கு மாறாக, காரணங்களை எங்களுக்குள் தேடுவதுதான் புத்திசாதுர்யமானது. இந்த அடிப்படை உண்மையை தமிழ் கட்சிகளின் தலைமைகள் என்போர் புரிந்து கொண்டு செயல்படுவதற்கு எப்போது முயற்சிக்கிறார்களோ அப்போதுதான் தற்போதுள்ள நிலைமையை ஓரளவாவது எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறுவார்கள். அவ்வாறில்லாது தொடர்ந்தும் கற்பனைகளில் மூழ்கி முத்தெடுக்கலாம் என்று எண்ணினால் நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து கொண்டே செல்லும்.

## இலங்கையின் வரி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 29

இலங்கையின் வரி வருமானம் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில், முந்தைய ஆண்டை விட 32.5 வீதமாக அதிகரித்துள்ளது.

சுங்கத்துறை மூலம் இறக்குமதிக்கான மதிப்புக் கூட்டு வரி மற்றும் உள்நாட்டு உற்பத்தி வரி மூலம் வரலாறு காணாத வரி வசூலே இந்த அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் இறுதிக்குள் வரி வருமானம் 32.5 வீதம் அதிகரித்து ரூ.3,563 பில்லியனாக உயர்ந்துள்ளது. முதன்மை உபரி ரூ. 1,465 பில்லியனாக உயர்ந்துள்ளது.

அரசாங்கத்தின் வருமானம் (மானியங்கள் உட்பட) 31.0 வீதம் அதிகரித்து ரூ.3,834.9 பில்லியனாக உயர்ந்ததால், பாதீட்டு பற்றாக்குறை பெயரளவில் 54.5 வீதம் குறைந்து ரூ.441.4 பில்லியனாக சுருங்கியுள்ளது.

2024 உடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதி வரி 42 வீதம் அதிகரித்து ரூ.605 பில்லியனாக உயர்ந்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தி வரி 94 வீதம் அதிகரித்து ரூ.552 பில்லியனாக உயர்ந்துள்ளது.

மோட்டார் வாகனங்களுக்கான உள்நாட்டு உற்பத்தி வரி ரூ.311 பில்லியனில் இருந்து ரூ.349 பில்லியனாக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

வருமான வரி 11.9 வீதம் அதிகரித்து ரூ.831 பில்லியனாக உயர்ந்துள்ளது.

மொத்தமாக வற் வரி 31 வீதமாக அதிகரித்து ரூ.1,239 பில்லியனாக உயர்ந்துள்ளது. (அ)

## சீனர்களின் எல்லை தாண்டிய சூதாட்டம் இண்டர்போலின் உதவிய நாடும் இலங்கை

கொழும்பு, ஒக். 29

இலங்கையில் சுற்றுலா விஸாவுடன் வந்து மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் சீனப் பிரஜைகளைக் கண்டறிந்து நாடு கடத்தி, அவர்களுக்குச் சீன சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கச் செய்வதற்காக, இலங்கை அரசாங்கம் சர்வதேச குற்றப்புலனாய்வு அமைப்பான இன்டர்போலுடன் இணைந்து செயல்பட ஆரம்பித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எல்லைத் தாண்டிய சூதாட்டம் மற்றும் மோசடி நடவடிக்கைகள் மீது கடுமையான சட்ட அமுலாக்கத்தை வலுப்படுத்தச் சீன அரசாங்கம் ஆவலுடன் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இடையிலான சமீபத்திய இரு தரப்பு சந்திப்பின்போது, இந்த விடயம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரும் சட்ட அமுலாக்கம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தி, எல்லைத் தாண்டிய சூதாட்டம் மற்றும் மோசடி போன்ற குற்றங்களை உறுதியுடன் எதிர்க்க வேண்டும் என்று தெரிவித்ததாகச் சீன வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஒரு வருடத்திற்குப் பின் டொலர் பெறுமதி 300 ரூபாவை தொட்டது!

கொழும்பு, ஒக். 29

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் வலுவிழக்கத் தொடங்கியுள்ள நிலையில், டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி மீண்டும் ரூ. 300 என்ற நிலையைத் தொட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்குப் பின்னர், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி ரூ. 300ஐ தொட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

வங்கி அல்லாத பரிவர்த்தனை நிலையங்களில் இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகவும், இந்த திடீர் உயர்வு பொருளாதாரச் சவால்களின் தொடர்ச்சியைக் காட்டுவதாகவும் நிதித்துறை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


இலங்கையின் ரூபாவின் பெறுமதி 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு பெரிய ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பொருளாதார நெருக்கடி உச்சத்தில் இருந்த போது, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ. 360-370 ஐ தாண்டி வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும், மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கைகள் மற்றும் வெளிநாட்டு நாணய வரவுகள் காரணமாக ரூபாய் படிப்படியாக பலம் பெறத் தொடங்கியது.

இதன் விளைவாக, டொலரின் கொள்முதல் பெறுமதி சுமார் ரூ. 290 என்ற அளவுக்குக் குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்களுடன் இருந்த மோதல்கள் விலகும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன்பனிப்போர்வந்துநீங்கும். நிதானம்தேவைப்படும்.

**மிதுனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம் -பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புது தொழில் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பழைய நினைவுகளின் இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**துலாம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். மனநிறைவு ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். பழையபிரச்னைகள் தீரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தினருடன் இணக்கமாக செல்லவும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். பொறுமை தேவைப்படும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மேலதிகாரி களுடன் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரம் தலைக்கும். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மீனம்**
எதையும் தாங்கும் மனோ பலமும் கிடைக்கும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

# சட்டவிரோத சொத்து சேர்ப்பு தொடர்பில் வவுனியாவிலும் விசாரணைகள் ஆரம்பம்

வவுனியா, ஒக். 29

சட்டவிரோதமான முறையில் சொத்து சேர்த்தமை தொடர்பில் வவுனியாவிலும் பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் சொத்து சேர்த்தவர்கள் தொடர்பில் விசாரணை செய்ய பொலிஸாரின் விசேட பிரிவு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து யாழ்ப்பாணத்தில் பலருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், வவுனியாவிலும் மீற்றர் வட்டி மற்றும் போதைப்பொருள் விற்பனை, மக்களிடம் அதிகமான காசோலைகளை பெற்றுக் கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு மிரட்டப்பட்டு சொத்துக்களை பெற்றமை, மோசடியான முறையில் காணிகளை அபகரித்து சொத்து சேர்த்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் சிலரிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை, வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப்பொருள் மாபியாவுக்கு எதிராக மக்கள் தகவல்களை எமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(எ-10)

# வேலணை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டடங்களுக்கு சபையின் அனுமதி அவசியம்

## தவறினால் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 29

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் எந்தவொரு தரப்பினரும் கட்டடங்களை நிர்மாணிக்கும் போது பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிபெற்று கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும் என தவிசாளர் சி. அசோக்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

அண்மைக்காலமாக பிரதேச சபையின் ஆளுகைக்குள் பல்வேறு கட்டுமாணங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதில் பலர் முறையான அனுமதி பெற்று நிர்மாண வேலைகளை முன்னெடுக்கவில்லை என தகவல்களூடாக உறுதிசெய்ய முடிகின்றது.

இவ்வாறு முறையான அனுமதி பெறாது நிர்மாணிக்கப்படும் கட்டுமாணங்கள் சட்டமுறையற்ற கட்டுமாணங்கள் என்றே கருத்தில் கொள்ளப்படும்.

அத்துடன் அவ்வாறு அடையாளப்படுத்தப்படும் கட்டுமாணங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் நிலையும் உருவாகும்.

எனவே, பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான விண்ணப்பத்தை பெற்று, அமைவுச் சான்றிதழ் அல்லது கால நீடிப்பு அனுமதியை பெறுதல், காணி உப பிரிவிடல் மற்றும் காணி ஒருங்கிணைத்தல் அனுமதியை பெற்றுக்கொள்ளல்,

நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களுக்குமான அனைத்து ஆவணங்களையும் சமர்பித்தல் போன்ற நடைமுறையை பின்பற்றி கட்டடங்களுக்கான நிர்மாண அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இதேநேரம் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டுமாணங்களால் அண்மைக்காலத்தில் பல்வேறு பிரச்னைகள் தோன்றி பல முரண்பாடுகளை அவை உருவாக்கி வருவதால் இந்த நடைமுறையை வேலணை பிரதேச சபை ஆளுகைக்குள் கட்டுமாணங்களை மேற்கொள்வோர் பின்பற்றுவது அவசியமாகும். அவ்வாறு பின்பற்ற தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

# நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் விபுலானந்தர் குருபூஜை விழா


யாழ்ப்பாணம், ஒக். 29

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் "ஈழத்து சமய பெரியார்கள்" குருபூஜை விழா தொடர் 07 முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளார் குருபூஜை விழா தெல்லிப்பழை மாவைகலட்டி

அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09. 00 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் ஆன்மீக விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சுவாமி விபுலானந்தர் அடிகளார் குருபூஜையை அடுத்து சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் சமயப்பணி" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். மாணவர்களின் கலைநிகழ்வும் ஆன்மீக விருந்தினர் உரையும் நடைபெறவுள்ளன. தொடர்ந்து குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொகுப்புரையை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் வழங்கவுள்ளார்.

# வவுனியாவில் சூரன் போர்



வவுனியா, ஒக். 29

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் வவுனியாவில் முருகன் ஆலயங்க ளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சூரன் போர் நடை பெற்றது.

நெளுக்குளம் சிறீ முருகன் ஆலயம், கந்தசாமி கோவில், தாண்டிக்குளம் முருகன் கோவில் உட்பட பல்வேறு ஆலயங்களில் சூரன் போர் சிறப்பாக நடைபெற்றது.

(எ-10)

# காரில் ஹெரோயின் கடத்திய வர்த்தகரின் மகன் கைதானார்

## இலஞ்சம் வழங்க முற்பட்டதாக பொலிஸார் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். நகரில் இலக்க தகடற்ற புதிய காரில் ஹெரோயின் போதைப்பொருளை கடத்திச் சென்ற நபரொருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 11 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டு கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் பிரபல வர்த்தகரின் மகன் எனவும் ஏற்கனவே ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பான வழக்கில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கைதிலிருந்து தப்புவதற்காக தமக்கு இலஞ்சம் வழங்க முயற்சித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான நபரை மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரத்தை நீடிக்கும் முடிவில் மாற்றம் எதுவுமில்லை!

## கல்வி அமைச்சு மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 29

**ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

"நாங்கள் நிபுணர்கள் அல்லர் தேசிய கல்வி நிறுவனமே சீர்திருத்தங்களை வடிவமைக்கும். அதன் கொள்கைகளை மாற்ற முடியாது. ஏற்கனவே செலவு ஒதுக்கப்பட்டுள்ளது" என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவேவ தெரிவித்துள்ளார்.

முதலில் ஒரு பாட நேரத்தை ஒரு மணி நேரமாக நீடிக்கவிருந்தது. ஆனால், ஒரு பாட நேரம் 50 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாகவே பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தங்கள் தேசிய கல்வி நிறுவனத்தின் பரிந்துரைகளின் படி செயல்படுத்தப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தற்போது பிற்பகல் 1.30 மணி வரை இருக்கும் பாடசாலை நேரம், இந்தச் சீர்திருத்தத்தின் கீழ் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை (30 நிமிடங்கள் அதிகரிப்பு) நீட்டிக்கப்படவுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் இந்த புதிய கால அட்டவணையை எதிர்த்து வருகின்றன.

எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிக்குள் அரசாங்கம் முன்மொழியப்பட்ட கால அட்டவணையைத் திருத்தாவிட்டால், புதிய பாடசாலைப் பருவம் தொடங்கும் போது ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் எச்சரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பெண் சட்டத்தரணி கொலை; சாரதி பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஒக். 29

மிரிஹான பகுதியைச் சேர்ந்த பெண் சட்டத்தரணியின் கொலை வழக்கில் சுமார் ஒரு வருடமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாரதி ஒருவரை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி சமர்ப்பித்த பிணை விண்ணப்பத்தை பரிசீலித்ததைத் தொடர்ந்து, மேல் நீதிமன்ற நீதிபதி லால் பண்டார இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அதன்படி, சந்தேக நபருக்கு ரூ.500,000 ரொக்கப் பிணையும், தலா ரூ.100,000 பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளும் வழங்கப்பட்டன.

நீதிமன்ற அனுமதியின்றி சந்தேக நபர் வெளிநாடு செல்வதைத் தடை செய்த நீதிபதி, வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்தார்.

பிணை நிபந்தனைகளின் ஒரு பகுதியாக, சந்தேக நபர் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முன்னியாக வேண்டும்.

இந்த நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்பட்டால், பிணை இரத்து செய்யப்பட்டு, சந்தேக நபர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்றும் நீதிபதி மேலும் தெரிவித்தார்.

கிரிந்த, புஹுல்வெல்ல பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர், இறந்த பெண் சட்டத்தரணியின் சாரதியாகப் பணியாற்றியவர்.

மேலும் 2024 செப்ரெம்பர் 21 அன்று அவரது கொலை தொடர்பாக மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்வி மறுசீரமைப்புக்கு எதிராக பெரும் தொழிற்சங்க நடவடிக்கை

## ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 29

முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானங்களை அரசாங்கம் மாற்றாவிட்டால், அடுத்த ஆண்டு பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி மறுசீரமைப்புகளுக்கு இணங்க, பாடசாலை நடைபெறும் நேரத்தை நீடிக்கவும், 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்நிலைமைகளால் மாணவர்கள் பெரும் அழுத்தத்துக்கு உள்ளாவார்கள் என குறித்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், கல்வி மறுசீரமைப்பு குறித்து அரசாங்கம் தனது தீர்மானங்களை மாற்றாத பட்சத்தில், பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார். (அ)

# வடக்கை பாதுகாக்கும் அரசு தெற்கை கறைபடிந்த பகுதியாக காட்ட முயற்சி!

## லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 29

வடக்கை பாதுகாக்கும் அரசாங்கம் தென் பகுதியை கறைபடிந்த பிரதேசமாக காட்ட முயற்சிக்கிறது என முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தென் பகுதிக்கு போதை



பொருள் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல் என எல்லாவற்றையும் தொடர்புபடுத்தி கறைபடிந்த பிரதேசமாக்குகின்றனர்.

ஆனால் அனைத்தும் வடக்கில் தான் நடந்துள்ளது.

பாதாள குழுவினர் வடக்கில் இருந்தே தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் வடக்கில் இருந்தே சென்றுள்ளனர்.

ஆனால் வடக்கை பற்றி கதைப்பதில்லை.

இந்த நாட்டை பாதுகாக்க தென்பகுதியில் இருந்தே ஆட்கள் சேர்க்கப்பட்டனர்.

இந்த நாட்டை காப்பாற்றும் போராட்டம் தென்பகுதியில் தான் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இன்று தவறான பார்வையை ஏற்படுத்தியுள்ளனர்.

புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்த வடக்கை பாதுகாக்கின்றனர்.

போதை பொருள் மற்றும் கஞ்சா எல்லாம் வடக்கிக்கு தான் வருகிறது. ஆனால் அவை குறிப்பிடப்படுவதில்லை.

1971 ஆம் ஆண்டு துரையப்பா கொலை செய்யப்பட்ட போது பொது மக்கள் பாதுகாப்பு சீர்குலைந்து தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாலேயே தமிழீழ போராட்டம் ஆரம்பமானது.

வெலிகம பிரதேச சபையின் தலைவர் கொலையின் பின்னர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கருத்து பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்புக்கு எவ்வித பிரச்னையும் இல்லையென தெரிவித்திருந்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பில் ஏற்படும் பாதிப்பே தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்-என்றார்.

### வெலிகம தவிசாளர் கொலை;

# சந்தேக நபர்களை தடுத்துவைத்து விசாரிக்க பொலிஸாருக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 29

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்ரமசேகர கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான துப்பாக்கிதாரி உட்பட ஆறு சந்தேக நபர்களை 72 மணி நேர தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 22ஆம் திகதி பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து லசந்த விக்ரமசேகர சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வந்தனர்.

அதற்கமைய, இந்த கொலையின் பிரதான துப்பாக்கிதாரி உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி உட்பட ஆறு சந்தேக நபர்களையும் மேலும் விசாரிப்பதற்காக, அவர்களுக்கு 72 மணி நேர தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது. (அ)

# 22 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 29

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தெற்கு, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இன்று முற்பகல் 11.00 மணியுடன் முடிவடையும் 24 மணி நேரத்துக்கு பலத்த காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இலங்கையின் வடகிழக்கில் வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள 'மோந்தா' சூறாவளி காரணமாக, மேற்படி பகுதிகளில் மணிக்கு 50-60 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசும்.

இதனால், 22 மாவட்டங்களுக்கு பலத்த காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையையும், 03 மாவட்டங்களுக்கு மிதமான எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

எனவே, காங்கேசந்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். (அ)

# அவிசாவளை நீதிமன்ற வளாகத்திற்குள் விளையாட்டுத் துப்பாக்கியுடன் பெண்!

கொழும்பு, ஒக். 29

அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றுக்காக விளையாட்டுத் துப்பாக்கியுடன் வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெடோல்பிட்டியவைச் சேர்ந்த பெண் நீதிமன்றத்துக்கு நேற்று முன் தினம் வழக்கு ஒன்றுக்காக வருகை தந்துள்ளார்.

நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலில் கடமையில் இருந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் குறித்த பெண்ணின் கைப்பைக்குள் இருந்து விளையாட்டுத் துப்பாக்கியொன்றைக் கைப்பற்றினார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டு அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# 182.5 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட போதைப்பொருளுடன் கனேடியர் கைது!

கொழும்பு, ஒக். 29

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 182.5 மில்லியன் ரூபா பெறுமதியான ஹஷிஷ் போதைப்பொருளை கடத்த முயன்ற குற்றச்சாட்டில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் 21 வயதான கனேடிய நாட்டவர் என்றும், அவர் உயர்கல்வி பயிலும் மாணவர் என்றும் கூறப்படுகிறது.


குறித்த நபர் நேற்று அதிகாலை விமான நிலையத்தின் கிரீன் சனல் வழியாக போதைப் பொருளை கடத்த முயன்றபோது சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அவர் நள்ளிரவில் டுபாயிலிருந்து ஒரு தனியார் விமானத்தின் மூலமாக நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

அவரது பொதிகளை சோதனையிட்டபோது, சுங்க அதிகாரிகள் 72 சிறிய பைக்கெற்றுகளில் ஆறு பெரிய பொலித்தீன் பொட்டலங்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 18 கிலோ கிராம் 253 கிராம் ஹஷிஷ் போதைப்பொருளை கண்டுபிடித்தனர்.

கைது செய்யப்பட்ட கனேடிய நாட்டவர் மீட்கப்பட்ட போதைப்பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2000 ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஈழத்து திருச்செந்தூர் எனப்போற்றப்படும் அம்பாறை மாவட்டம், திருக்கோவில் சிறீ சித்திரவேலாயுதசுவாமி கோவிலில் சூரசம்ஹாரம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. ( படங்கள்-வி.ரி.சகாதேவராஜா)

### மட்டக்களப்பு குருக்கள்மடம்

# மனித புதைகுழி வழக்கு நவ.17வரை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்குடன் தொடர்புடைய அனைவரையும் எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதுடன் வழக்கானது எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான எம். மனாறுதீன், முபாறக் அஸ்ஸம் உட்பட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தொடர்பில் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிதி தொடர்பில் தாமதங்களை உணர்ந்த நீதிவான், இந்த வழக்குடன் தொடர்புடைய அனைவரும் எதிர்வரும் 17ஆம் திகதி 02.00 மணியளவில் நீதிமன்றுக்கு வருகைதந்து கலந்துரையாடலை மேற்கொண்டு ஒரு தெளிவான தீர்மானத்தை எடுப்பதற்காக நீதிவானால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி மனாறுதீன் தெரிவித்தார். (எ-01)

# கல்முனை சுனாமி வீட்டுத்திட்ட மக்களின் அவல நிலை நீடிப்பு

கல்முனை, ஒக். 29

அம்பாறை மாவட்டம், கல்முனை இஸ்லாமாபாத் சுனாமி வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் மக்கள் தற்போது கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இங்கு கழிவு நீர் தேங்கி நாற்றம் வீசுவதோடு, பல்வேறு நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மழைக் காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகி, வீதிகள் முழுவதும் நீர் தேங்கி மக்கள் நடமாட்டத்துக்கும் சிரமத்தை உண்டாக்குகின்றது.

குறிப்பாக இந்தப் பிரச்னை பி2 மற்றும் பி3 மாடிகளில் மிகுந்த தீவிரமாக காணப்படுகின்றது.

இந்தப் பிரச்னை புதியதல்ல. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இங்கு இதுபோன்ற நிலை ஏற்படுவதும், மக்கள் தங்களது சொந்த செலவில் தற்காலிக தீர்வுகளை மேற்கொள்வதுமாக நிலைமை நீடித்து வருகிறது.

மக்கள் மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்னையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தாலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (எ-01)





# மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

நுவரெலியா, ஒக். 29

நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு மரம் ஒன்று முறிந்து வீழ்ந்தமையால் குறித்த வீதியூடாக போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், சுமார் ஒரு மணி நேரத்துக்கு பின்னர் குறித்த வீதியூடானான போக்குவரத்து சீரானது.

நுவரெலியா மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் நுவரெலியா பொலிஸாரின் உதவியுடன் ஒரு மணி நேரத்தில் மரத்தை முழுமையாக வெட்டி அகற்றினர். அதிர்ஷ்டவசமாக மரம் விழுந்தபோது நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் வாகனம் எதுவும் செல்லாததால் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படவில்லை. இருப்பினும், வாகனங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா - உடப்புசல்லாவ பிரதான வீதியை பயன்படுத்தி கடும் சிரமத்துக்கு ஆளாகினர்.

நுவரெலியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழை மற்றும் காற்று காரணமாக மரங்கள் விழுவது அதிகரித்துள்ளது. இதனால், வாகனங்களை பழமையான மரங்களுக்கு அடியில் நிறுத்த வேண்டாம் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக நுவரெலியா பேருந்து தரிப்பிடம் முதல் பதுளை மற்றும் கண்டி செல்லும் பிரதான வீதியில் 50 இற்கும் மேற்பட்ட பழமையான மரங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் விழும்நிலை உள்ளது. எனவே, அந்த மரங்களை அப்புறப்படுத்த வேண்டும்என வாகன சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையொதுங்கும் நண்டுகள்

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளில் உள்ள கடற்பகுதியில் நண்டுகள் கரையொதுங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கடற்பகுதிகளில் இவ்வாறு நண்டுகள் கரையொதுங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள கடற்பகுதிகளில் இவ்வாறு நண்டுகள் கரையொதுங்கி வருகின்றன.

சிவப்பு நிறத்திலான சிறிய அளவிலான நண்டுகளே இவ்வாறு கரையொதுங்கிவருவதாகவும் காலநிலை மாற்றங்களால் நண்டுகள் கரையொதுங்குவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

சில காலங்களில் இவ்வாறான செயல்பாடுகள் நடைபெறும் எனவும் கடலில் ஏற்படும் மாற்றங்களாலும் இவ்வாறு நடக்கும் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர். (எ)

# மட்டக்களப்பில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு - சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது, மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது, காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பின்னால் இருந்த இருவரும் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் கிராண் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் மட்டக்களப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மத்திய மாகாணத்தில் மழை

கொழும்பு, ஒக். 29

மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு மாகாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் சில நேரங்களில் மழை பெய்யக்கூடும் என வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைகளின் மேற்கு சரிவுகளிலும் மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தெற்கு, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

பலத்த காற்றால் ஏற்படும் சேதங்களைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# மட்டு. வாகனேரி பகுதியில் இரு கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 29

வாழைச்சேனை - பொலநறுவை பிரதான வீதியிலுள்ள வாகனேரி 125 ஆவது மைல் கல் பகுதியை அண்டிய காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த இரு கைக்குண்டுகளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை புலனாய்வுத் துறைக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைய விசேட அதிரடிப்படையினருடன் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து இரு கைக் குண்டுகளையும் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கைக் குண்டுகளை நீதிமன்ற உத்தரவை பெற்று வெடிக்க வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அமைச்சர்களாலேயே...

இல்லத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், 1980 காலப்பகுதியில் மீன்பிடித்துறையில் நாம் எழுச்சி பெற்றிருந்தோம். போர் காரணமாக அந்த நிலை வீழ்ச்சி அடைந்தது. கடல் வலய சட்டம் உள்ளிட்ட தடைகளால் எமது கடற்றொழில் மிகப்பெரும் பாதிப்புகளை சந்தித்தது. இந்தக் காலத்தில் இந்திய மீனவர்களே எமது கடலில் மீன்வளதை அள்ளிச்சென்றனர்.

எனது இளம் பராயத்தில் தொடங்கிய இந்தப் பிரச்னை இன்று ஒய்வூதிய நிலைக்கான வயது மூப்பை அடைந்த போதிலும் தொடர்கதையாக உள்ளது. ஆனால் எம்மை ஒத்த வயதினர் வேறு துறைகளில் பயணம் செய்தவர்கள் வளர்ச்சி நிலையை அடைந்துள்ளனர். கடலை மட்டுமே நம்பி இருக்கும் மீனவர்களின் நிலை மிக கவலைக்குரியதாக மாறியுள்ளது.

இந்திய இழுவை படகுகளின் அத்துமீறிய மீன்பிடி, உள்ளூரில் தடை செய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளால் எமது கடல் வளம் பாதிக்கப்படுகிறது. இதனால், எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டு வருகிறது

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அதிகளவில் சுருக்குவலை, கணவாய் குழைகளை கடலில் போடுவது உள்ளிட்ட தடை செய்யப்பட்ட தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். அதனால் வடமராட்சி வடக்கு கடல் பரப்பை நம்பி இருக்கும் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. தான் தான் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய மனப்பான்மையுடன் எம்மவர்கள் நடப்பதன் காரணமாகவே தடை செய்யப்பட்ட தொழில்களுக்கு உடந்தையாக செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எதிர்கால சந்ததிக்கு எமது கடல் வளத்தை பாதுகாக்கும் அக்கறை இல்லாது போய்விட்டது. இது விடயத்தில், ஆட்சிகள் மாறினாலும் அதிகாரிகளின் மெத்தனப்போக்கு மாற்றமின்றியே தொடர்ந்து வருகின்றது.

கடற்றொழில் அமைச்சராக தமிழர்கள் வந்தபின்னரே வடக்கு மீனவர் சமூகம் பிளவுண்டுபோயுள்ளது. தமிழ் அமைச்சர்களாக முன்னர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது சந்திரசேகர் தரப்புகளின் அரசியல் ஆதிக்கம் சங்கங்கள் சமாசங்களுக்குள் ஊடுருவியதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் சார்ந்த அரசியல் ஆதாயங்களுக்காக மீனவர் சமுதாயத்தை பயன்படுத்தி வருகின்றனர். சங்கங்களில் பொறுப்புகளில் உள்ள பலர் மீனவர் சமுதாயத்தின் நலன்களை கைவிட்டு சுயநல காரணங்களுக்காக இவ்வாறான தரப்புகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றனர். இதனால் சங்கங்களை சமாசத்தினால் கட்டுப்படுத்தவோ வழி நடத்தவோ முடியாதுள்ளது. - என்றார்.

## இலங்கை...

ஒத்துழைப்பு, மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பல தசாப்த காலமாக அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்பவற்றை உள்வாங்கக்கூடியவகையில் மிகத் தெளிவான மனித உரிமைகள்சார் சுவிற்சர்லாந்து வெளிநாட்டுக்கொள்கை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையில் இடம்பெற்ற போர் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்கவும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கும் சுவிற்சர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், வருடாந்தம் மே 18ஆம் திகதி நடைபறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உள்ளிட்ட நினைவுகூரல்கள் எவ்வித இடையூறுமின்றி முன்னெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்படவேண்டும். சுவிற்சர்லாந்தில் உள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பும் நீதியும் உறுதிப்படுத்தப்படும் வரை அவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்புவது தவிர்க்கப்படவேண்டும் - என்றும் அந்தக் கட்சியின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஜனநாயக கட்சி சுவிற்சர்லாந்தின் இரண்டாவது பெரிய கட்சியாக உள்ளது. 1960ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டாட்சி பேரவையில் 7 உறுப்பினர்களில் 2 உறுப்பினர்களை கொண்டுள்ளது. கடந்த 2023ஆம் ஆண்டு தேர்தலின் பிரகாரம் 200 உறுப்பினர்களை கொண்ட தேசிய அவையில் 41 உறுப்பினர்களை பெற்று, இரண்டாவது பெரிய கட்சி என்ற இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதன் மாநாடு கடந்த 25ஆம் திகதி சர்சி என்ற இடத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## செவ்வந்தி...

மீட்கப்பட்டமை தொடர்பில் வவுனியாவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த 45 வயதான வர்த்தகர் ஒருவரே கைதாகி தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர், விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது.

எனினும், ஆனந்தனிடம் வழங்கிய துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் எங்கிருந்து கிடைத்தன என்பது தொடர்பில் வர்த்தகர் தகவல்கள் எதனையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இஷாராவுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் இதுவரை 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 07 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய 03 பேரும் நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஐ)

## அரசுக்கு...

சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்தார். 21ஆம் திகதி நடைபெறும் போராட்டத்தில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் எண்ணம் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு மீண்டும் அழைப்பு விடுக்கிறோம்.

கட்சி பேதமின்றி எதிரணியில் உள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பல கட்சிகள் ஏற்கனவே இணைந்துள் ளன. நாட்டின் முக்கிய அரசியல் கட்சி கள் பலவும் இணைந்துள்ளன. நாங்கள் இந்தப் பேரணியை எமது கட்சிக்காக மாத்திரம் ஏற்பாடு செய்யவில்லை. இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றால், அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இந்தத் திட்டம் மக்களுக்கு பிடிக்கவில்லை என்றால், மக்கள்தான் தீர்மானிப்பார்கள் யார் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்பது மக்களின் தீர்மானதமாகும். யாரும் வரலாம் - மக்கள்தான் முடிவு செய்வார்கள். எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் வந்தால், மக்கள் யார் நல்லவர் என்று தீர்மானிப்பார்கள்.

எங்களுடைய பக்கம், நாங்கள் நாமல் ராஜபக்ஷவை நமது நாட்டின் ஜனாதிபதியாக ஆக்க முயற்சிக்கிறோம். அந்த முயற்சியைத் தொடர்வோம். ஒவ்வோர் அரசியல் கட்சியும் தங்களுக்கு வேண்டியவரை ஆதரிக்கலாம். ஆனால் நுகே கொடை கூட்டம் ஒருவரை முன்னிலைப்படுத்தவோ அல்லது ஒருவரை ஜனாதிபதியாக்கவோ அல்ல. இது அரசின் கொள்கைகளுக்கு எதிராக அனைவரும் இணைந்து குரல் கொடுக்கும் கூட்டமாகும் - என்றார். (ஐ)

## செம்மணி...

போராட்டம் நடைபெற்றது.

இதில், சர்வமதத் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## உலட்சம்...

பாடசாலை நிகழ்வு ஒன்றில் பங் கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 30 ஆயிரத்து 982 பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகியுள்ளனர். தென் மாகாணத்தை பற்றிப் பேசினால், இதைவிட அதிக எண்ணிக்கையிலானவர்கள் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பாதாள உலக நடவடிக்கைகளில் தென் மாகாணம்தான் முதலிடத்தில் உள்ளது. சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையினர் இளைஞர்களாவர். இதில் அதிகமானவர்கள் குறைவான எழுத்தறிவு மட்டத்தில் காணப்படுகின்றனர்.

தங்கள் தாய்மார் செய்த தவறுகளால் 5 வயதுக்கு குறைவான 42 குழந்தைகள் சிறையில் உள்ளனர். வழக்குகளை விசாரித்து 10 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். 5 ஆண்டுகள் வரை தாயும் குழந்தையும் ஒன்றாக இருக்க அனுமதிக்கிறோம். 5 வயது பூர்த்தியாகும் நாளில் குழந்தையையும் தாயையும் பிரித்து வைக்கிறோம். அது என் வாழ்க்கையில் நான் கண்ட மிக சோகமான சந்தர்ப்பங்களில் ஒன்றாகும். குழந்தை அம்மாவை வேண்டி அழுகிறது. அம்மாவும் குழந்தையை வேண்டி அழுகிறாள். 5 வருடங்களாக அவர்களுக்கு இருந்த ஒரே உறவு அதுதான். அதில் சட்டம் குறுக்கிடுகிறது. அதனால், ஒருபோதும் ஒரு பெண்ணாக நீங்கள் தவறு செய்யாதீர்கள். போதைப்பொருள் இல்லாத நாட்டை உருவாக்க இந்த அரசாங்கத்துக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது - என்றார்.

இதேநேரம், பிரதி பொலிஸ் மா அதிபர் ஜயந்த பத்மினி வீரசூரிய,

பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று கூறினார். (ஐ)

## கிழக்கில்...

அரசுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது. இதன்கீழ் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தேவை களைப் பூர்த்தி செய்கின்ற 33 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற் காக 237 கோடியே 18 இலட்சத்து 30 ஆயிரம் இலங்கை ரூபாய்களை நன் கொடையாக வழங்க இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் இந்திய தூதரகம் மற்றும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் இடையில் வேறுவேறாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடப்பட வேண்டியுள்ளளது.

இதற்கிணங்க, இந்தியாவின் பல்துறைசார் நன்கொடையின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 33 கருத்திட்டங்களுக்கான 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இந்திய தூதுவர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## யாழில்...

இருவரும் 24, 27 வயதுடையவர்களாவர்.

சந்தேகநபர்களிடமிருந்து 160 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

## எதிர்க்....

நாடு வீழ்ச்சியடைந்தபோது - மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருந்த எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டை மீட்டெடுப்பதற்காக எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றிணையவில்லை. ஆனால், இன்று மிக அவசரமாக ஒன்றிணைவதற்கான திட்டங்களை வகுக்கின்றன. இதன் நோக்கம் என்னவென்பதை பொதுமக்கள் நன்கு அறிவர். இந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளுக்கு தலைவர் யார் என்பதிலும் பிரச்னை உள்ளது. அதே போல ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளால் அரசாங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

அவர்கள் ஏன் இணைகிறார்கள் என்பது குறித்து அரசாங்கம் என்ற வகையில் எங்களுக்கு நன்றாக தெரிகிறது. எது எவ்வாறாயினும் அவர்களின் எதிர்காலத்தை நன்றாக வைத்துக்கொள்வதற்காகவும் சட்டச் சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்காகவும் மாத்திரமே இவ்வாறு இணைகின்றனர். இதனால் பொது மக்களுக்கு எந்தவொரு நன்மையும் நடக்கப் போவதில்லை - என்றார். (ஐ)

## மன்னாரில்....

இதற்கான கோரிக்கைக் கடிதத்தை ஆவணமாக சமர்ப்பிக்குமாறு மன்னார் மாவட்ட செயலகத்துக்கு எரிசக்தி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ்வரன் தெரிவிக்கையில்,

"அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய மன்னார் மாவட்டத்தில் இயங்கும் சர்வ மத, பொது அமைப்புகள் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவிடம் மனுக்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கிணங்க, பொது அமைப்புகளிடமிருந்து கடிதம் கிடைத்துள்ளது. சர்வமத அமைப்புகள் மனுக்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. எனினும், மன்னார் பிரஜைகள் குழு இந்த தீர்மானத்துக்கு இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை - என்றார்.

கோரிக்கைக் கடிதம் கிடைத்ததன் பின்னரே எரிசக்தி அமைச்சு கோரியுள்ள ஆவணத்தைத் தயார் செய்து அனுப்ப முடியும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கிழக்கு...

மேலும், "கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிழக்கில் நாங்கள் பல்லாயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணித்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கான கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உபகரணங்களும் எம்மால் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், தொழில் பயிற்சி நிலையங்களும் எம்மால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கிழக்கில் 235 கோடி இலங்கை ரூபாய் விசேட பல்துறை நன்கொடை உதவி எங்களால் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித் திட்டத்தின் கீழ் 33 சமூக, பொருளாதார, அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சில திட்டங்கள் அம்பாறை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்துக்கும் இலங்கையில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சாத்தியமான அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் நாம் தொடர்ந்து ஆதரவு வழங்குவோம். இலங்கை மக்களின் நல்வாழ்வு தொடர்பில் இந்தியா எப்போதும் உறுதுணையாக நிற்கும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இராமேஸ்வரம்-தலைமன்னார் இடையே புதிய படகு பாதை குறித்து விவாதிப்பு!

## மும்பையில் இரு தரப்பும் சந்தித்து பேச்சு

புதுடில்லி, ஒக். 29


**மும்பையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு இந்திய கடல்சார் வாரத்தின்போது, அந்நாட்டு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்த சோனோவால், இலங்கை துறை முகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலகவுடன் இரு தரப்பு சந்திப்பை நடத்தினார்.**

இதன்போது, இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே புதிய பாதையை தொடங்குவதன் மூலம் இந்தியா-இலங்கை கடல்சார் இணைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இந்த சந்திப்பு குறித்து எக்ஸில் பதிவிட்டுள்ள இந்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சு-

" 2025 இந்தியா கடல்சார் வாரத்தில் பொதுத்துறை மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் ஸ்ரீ சர்பானந்த சோனோவால் மற்றும் இலங்கை துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக இடையே இருதரப்பு சந்திப்பு நடைபெற்றது.

இந்தியா-இலங்கை படகு சேவை மூலம் கடல்சார் இணைப்பை மேம்படுத்துவது மற்றும் இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னாருக்கு இடையே ஒரு புதிய பாதையைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வது, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் மக்களிடையேயான தொடர்பை மேலும் ஆழப்படுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.




நாகப்பட்டினம் (தமிழ்நாடு) மற்றும் காங்கேசன்துறை இடையேயான தற்போதைய பாதையுடன் சேர்த்து, இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே புதிய படகுப் பாதையை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இந்தியா விவாதித்து வருகிறது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சு மும்பையில் நடத்திய 2025 ஆம் ஆண்டு இந்திய கடல்சார் வாரத்தின்போது இந்த விவாதங்கள் நடைபெற்றன.-என குறிப்பிட்டுள்ளது. (அ)

# அரசாங்க பிணையங்களில் வெளிநாட்டு முதலீடு உச்சம்!

## 2 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்வு

கொழும்பு, ஒக். 29

அரசாங்கப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அண்மைய தரவுகள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ரூபாய் மதிப்பிலான பிணைமுறி மற்றும் திறைசேரி உண்டியல்களில் தமது முதலீடுகளைத் தொடர்ந்து அதிகரித்து வருகின்றனர்.

அதன்படி, கடந்த 23 ஆம் திகதிய நிலவரப்படி, திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளில் உள்ள வெளிநாட்டு உடைமைகள் ரூ. 130.96 பில்லியனாக உயர்ந்துள்ளது.

இது கடந்த 2023 நவம்பர் 16 ஆம் திகதிக்குப் பிறகு பதிவான மிக உயர்ந்த அளவாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் மட்டும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அரசாங்கப் பிணையங்களில் ரூ. 606 மில்லியன் நிகர முதலீட்டை மேற்கொண்டுள்ளனர்.

அதிக வட்டி வீதங்கள் மற்றும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மீதான நம்பிக்கை காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ரூபாய் மதிப்பிலான இந்தப் பத்திரங்களில் தமது ஆர்வத்தைத் தொடர்ந்து அதிகரித்து வருவதாக நிதிச் சந்தை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் போக்கு நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்புக்கும், ரூபாயின் உறுதிக்கும் சாதகமான சமிக்ஞையாகப் பார்க்கப்படுகிறது. (அ)

# மகிந்தானந்த, நளின் ஆகியோரின் மேன்முறையீடுகள் விசாரணைக்கு!

கொழும்பு, ஒக். 29

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று திகதி நிர்ணயித்தது.

அதன்படி, உயர் நீதிமன்றம் இந்த மேன்முறையீட்டு மனுக்களை 2026 ஜனவரி 20 அன்று விசாரிக்கும்.

மேன்முறையீட்டு மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேன்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில், தற்போது காவலில் உள்ள முன்னாள் அமைச்சர்கள் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 21 ஆம் திகதி போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி இல்லை?

கொழும்பு, ஒக். 29

எதிரணிகளால் எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என தெரியவருகின்றது.

பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய உள்ளிட்ட எதிரணிகள் நேற்று முன் தினம் கொழும்பில் ஊடக சந்திப்பை நடத்தின.

தேசிய மக்கள் சக்தியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலும், ஜனநாயகம் மற்றும் மக்களின் வாழும் உரிமையை பாதுகாக்குமாறு கோரியுமே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது.

எனினும், குறித்த ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தி பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை. இந்நிலையிலேயே 21 ஆம் திகதி கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என தெரியவருகின்றது. (அ)

# இடைத்தரகர்களால்தான் தேங்காய் விலை உயர்வு!

கொழும்பு, ஒக். 29

இடைத்தரகர்கள் இலாப மீட்டுவதனூடாகவே தேங்காய்க்கான விலை அதிகரித்துள்ளதாக தெங்கு உற்பத்திச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஏலத்தில் 134 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் தேய்காய் ஒன்று 180 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனூடாக இடைத்தரகர்கள் 40 முதல் 50 ரூபாய் வரை இலாப மீட்டப்படுவதாக தெங்கு உற்பத்திச் சபை குறிப்பிட்டுள்ளது.

தேங்காய்க்கான நிர்ணய விலை அறிவிக்காமையும், விலை அதிகரிப்புக்கு காரணம் என அந்த சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி கூறினார்.

தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் நுகர்வோருக்கு அதன் பலனை அடையும் வகையில் விலை நிர்ணயிக்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 380இற்கும் மேற்பட்ட மருந்துகள் தட்டுப்பாடு 4 மாதங்களாக குருதி பரிசோதனை இல்லை!

கொழும்பு, ஒக். 29

இலங்கையின் சுகாதாரத் துறை பாரிய நெருக்கடியில் உள்ளதாகவும், நாட்டில் அத்தியாவசிய மருந்துகள் உட்பட 380க்கும் மேற்பட்ட மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த நான்கு மாதங்களாக தேசிய மருத்துவமனை உட்பட எந்தவொரு அரச மருத்துவமனையிலும் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன் காரணமாக, மக்கள் பணத்தைச் செலவழித்து தனியார் ஆய்வுகூடங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இத்தகைய நடவடிக்கை தடை செய்யப்பட்டிருந்தது.

நோயாளர்கள் சத்திர சிகிச்சை செய்துகொள்ளச் சென்றால், சத்திர சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களை வெளியே சென்று பணம் கொடுத்து வாங்குவதற்கான பட்டியலை வைத்தியர்கள் வழங்குகின்றனர்.

முன்னர் சத்திர சிகிச்சைகள் மற்றும் அனைத்துப் பரிசோதனைகளும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது நோயாளிகள் குறைந்தபட்சம் ரூ. 50,000 முதல் ரூ. ஒரு இலட்சம் வரை செலவழிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதய சத்திர சிகிச்சை அலகுகளில் கூட, பைபாஸ் சத்திர சிகிச்சை போன்றவற்றுக்குத் தேவையான பொருட்களுக்கான பட்டியலை நோயாளிகளுக்கு வழங்கி, அவர்களை வெளியே பணம் செலவழிக்க வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையின் இந்த வீழ்ச்சியால், இலவச சுகாதாரத்துறை கேள்விக்குறியாகியுள்ளது-என்றார். (அ)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 9 மாதங்களில் 414 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஒக். 29

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 414 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 192 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அந்த அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 7,677 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் 6,296 முறைப்பாடுகளும், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்துடன் தொடர்பில்லாத 1,381 முறைப்பாடுகளும் உள்ளடங்குவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் அதிக பட்ச எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த மாதத்தில் மாத்திரம் 1,176 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 49 முறைப்பாடுகள் பாலியல் வன்புணர்வுடன் தொடர்புடையவை, 111 முறைப்பாடுகள் சிறுவர் தொழிலாளர் முறைமை தொடர்பாகவும், 203 முறைப்பாடுகள் பிச்சை எடுத்தலில் குழந்தைகளை ஈடுபடுத்துவது தொடர்பாகவும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்துடன் தொடர்பில்லாத ஏனைய முறைப்பாடுகளில், இளவயது கர்ப்பம் தரித்தல் தொடர்பான 62 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அது தவிர, சிறுவர்களுக்கு எதிரான இணையத்தள துன்புறுத்தல் தொடர்பான 102 முறைப்பாடுகளும், வீட்டு வன்முறை தொடர்பான 38 முறைப்பாடுகளும், தற்கொலை முயற்சி தொடர்பான 13 முறைப்பாடுகளும், கருக்கலைப்பு தொடர்பான ஒரு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org